

▲ சென்னை சென்ட்ரல் புறநகர் மின்சார ரயில் நிலையம் அருகே சுரங்கப் பாதையில் 100 கார்கள் நிறுத்த வசதியாக, புதிய வாகன நிறுத்தம் அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. இது, விரைவில் மக்களின் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கப்பட உள்ளது.

ஒரே நேரத்தில் 100 கார்கள் நிறுத்தலாம்

# சென்ட்ரல் சுரங்கப் பாதையில் புதிய வாகன நிறுத்தும் இடம்

## ● விரைவில் திறக்கப்படும் என தகவல்

■ சென்னை

சென்னை சென்ட்ரல் புறநகர் மின்சார ரயில் நிலையம் அருகே சுரங்கப் பாதையில் 100 கார்கள் நிறுத்தும் வகையில் வாகன நிறுத்தம் அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. விரைவில் மக்களின் பயன்பாட்டுக்கு தொடங்கி வைக்கப்படும் என்று மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னைசென்ட்ரல்ரயில்நிலையம் எதிரே பூந்தமல்லி நெடுஞ் சாலைக்கு கீழே 70,060 சதுர அடி பரப்பில், சுரங்க மெட்ரோ ரயில் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. 2 வழித்தட மெட்ரோ ரயில்களும் இணையும் முக்கிய மையமாக சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம் திகழ்கிறது.

சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் மற்ற பகுதி களை இணைக்கும் வகையில் சுரங்கப் பாதைகள் அமைக்கப் பட்டு படிப்படியாக மக்களின் பயன் பாட்டுக்கு திறந்து வைக்கப்பட் டுள்ளன. இதற்கிடையே, சுரங்கப் பாதையில் பயணிகளின் வசதிக்காக 100 கார்கள் நிறுத் தும் வகையில் வாகன நிறுத்தம் அமைக்கும் பணிகள் நிறைவடைந் துள்ளன.

இதுதொடர்பாக மெட்ரோ ரயில் அதிகாரிகள் கூறியதாவது: சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் பூங்கா நகர், ரிப்பன் மாளிகை, சென்ட்ரல் ரயில் நிலையம், ராஜீவ்காந்தி அரசு பொதுமருத்துவமனை, சென்னை மருத்துவக் கல்லூரி, பின்புறத்தில் மற்றொரு வழிதடம் என மொத்தம் 6 நுழைவு வாயில்கள் இணைக்கப்பட்டு சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான சுரங்கப் பாதை கள் திறக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் சாலைகளில் கடந்து செல் வதை தவிர்த்து, சுரங்கப் பாதை களை பயன்படுத்த வேண்டுமன தொடர்ந்து அறிவுறுத்தி வருகி றோம். பயணிகளின் வசதிக்காக சென்னை புறநகர் மின்சார ரயில் நிலையம் அருகே சுரங்கப் பாதை யில் 100 கார்கள் நிறுத்தும் வகையில் வாகனம் நிறுத்துமிடம் அமைக்கும் பணிகள் நிறை வடைந்துள்ளன. இது மக்கள் பயன்பாட்டுக்கு விரைவில் திறந்து வைக்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.